**தலைப்பு 119 - வலுசக்தி அமைச்சு - 2025**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 119 - வலுசக்தி அமைச்சின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 11(1) பிரிவின் பிரகாரம் வலுசக்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய தொகுப்பு அறிக்கை 2026 மே 29 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சுக்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2026 ஜீலை 01 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வலுசக்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் வலுசக்தி அமைச்சின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை வலுசக்தி அமைச்சின், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானம் கிடைப்பனவு

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 ஏப்ரல் 25 ஆம் திகதியிட்ட அ.ம.தீ/23/0632/621/031 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறையின் வருடாந்த நிலையான பதிவுக்கட்டணமாக ரூபா 6,000,000 உம், அதற்கு மேலதிகமாக வருடாந்த விற்பனைப் பெறுமதியின் 0.9 சதவீதமுமாகும். அவ்வாறு கணிக்கப்பட்ட பெறுமதியிலிருந்து வருடாந்த நிலையான பதிவுக்கட்டணத்தைக் கழித்து, எஞ்சிய தொகையை மாறுபடும் பதிவுக்கட்டணமாக அறவிடுதல் வேண்டும். உரிமம் பெற்றவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் 3.5 ஆம் பிரிவின்பிரகாரம், உரிமம் பெற்ற நிறுவனங்கள் இறக்குமதி மற்றும் விற்பனை தொடர்பான விபரங்களை மாதாந்தமும், அரையாண்டு முடிவடைந்து 14 நாட்களுக்குள்ளும், வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட விபரங்களை 06 மாதங்கள் நிறைவடைவதற்கு முன்னரும் அமைச்சுக்கும் பொதுப் பயன்பாடுகள் | கடந்த ஆண்டுகளில் இவ்விற்பனை வருமானம் சம்பந்தமாகப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. எதிர்கால நடவடிக்கைகளுக்காக, சரியான விபரங்களைச் சேகரிப்பதற்குக் புதிய டிஜிட்டல் நடைமுறையொன்றை விரைந்து அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒப்பந்தத்திற்கு இணங்க, பதிவுக்கட்டணங்களையும் மாறுபடும் வருமானத்தையும் உரிய காலப்பகுதிக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பிக்க வேண்டும். 2025ஆம் ஆண்டில் வருடாந்த உரிமங்களைப் பெற்றுக்கொண்ட 35 நிறுவனங்களில் 16 நிறுவனங்கள் மாத்திரமே சுயமதிப்பீட்டின் அடிப்படையில் மாறுபடும் பதிவுக்கட்டணங்களைச் செலுத்தியிருந்த போதிலும், ஒப்பந்தத்திற்கு இணங்க மாறுபடும் பதிவுக்கட்டணங்களைச் சரியாக இனம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாதிரித் கணக்காய்வுப் பரிசோதனையின்படி, ஒரு நிறுவனம் 2025ஆம் ஆண்டின் காலாண்டு அறிக்கைகளுக்கு அமைவாக உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனை வருமானத்தின் மீது கிடைக்கப் பெற வேண்டியிருந்த ரூபா 20,523,031 மாறுபடும் பதிவுக்கட்டணத்தைச் சேகரிப்பதற்கோ அல்லது நிலுவை வருமானமாகக் கணக்கேற்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண ஒதுக்கம்

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2009ஆம் ஆண்டில் அமைச்சிற்கு 60 சதவீத உரிமையாண்மையுடன் ஆரம்ப மூலதனம் உள்ளடங்கலாக ரூபா மில்லியன் 300 இற்கும் அதிக செலவை ஏற்படுத்தி வரையறுக்கப்பட்ட பொலிப்டோ லங்கா தனியார் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டு, அதனூடாகக் கழிவுப் பிளாஸ்டிக்/பொலித்தீன்களிலிருந்து எரிபொருள் உற்பத்தி செய்வதே பிரதான நோக்கமாகக் காணப்பட்ட போதிலும், அது நிறைவேற்றப்படாமை காரணமாக, 2018 செப்டம்பர் 26ஆம் திகதி செயல்பாட்டு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட்டிருந்தது. அவ்வொப்பந்தத்திற்கு இணங்க, உற்பத்தியாளரினால் அமைச்சிற்கு 2018ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுகளில் தீர்க்கப்பட வேண்டிய பிரதிபயனாகிய ரூபா 82,019,500 பெறுமதியானது கிடைக்கப்பெற வேண்டிய ஒன்றாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அமைச்சிற்குக் கிடைக்க வேண்டிய பிரதிபயனைக் கணிப்பிடும்போது ரூபா 1,250,000 ஆக | பொலிப்டோ லங்கா தனியார் கம்பனிக்குச் சொந்தமான Toyota Crew வகை வாகனத்தின் மதிப்பீட்டை அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ள முடியாது என அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில், ஏனைய மதிப்பீட்டுப் பெறுமதிகளான ரூபா 82,019,500 ஆனது KL/LM மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு, அத்தொடர்புடைய செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருந்தது. பின்னர், லங்கா ஒடோ மொபைல் கம்பனியிடமிருந்து அவ்வாகனத்திற்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி மில்லியன் 1.25 ஆகக் கிடைத்தது. அம்மதிப்பு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும், அது அரசாங்கத்தின் | கிடைக்கப்பெற வேண்டிய பெறுமதிகளை அறவிட்டு, நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| மதிப்பிடப்பட்ட மோட்டார் வாகனத்தின் பெறுமதி கணக்கில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்தாக அக்கம்பனியின் வசம் காணப்படுகின்றது. அதன் மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா மில்லியன் 83.269 ஆகும். | |

(இ) முற்பணம் கணக்கு நிலுவைகள்

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வலுசக்தி அமைச்சினால் இரண்டு வருடங்களுக்குக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த தொழிலாளர் காங்கிரஸ் கட்டிடத்திற்காக மீளாய்வுக்குரிய ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 2,130,000 முற்பணக் கொடுப்பனவானது, ஆண்டின் செலவினமாகக் பதிவு செய்யப்பட்டிருந்தமையின் காரணமாக, கணக்கீட்டுக் காலப்பகுதிக்கு அப்பாற்பட்டுச் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையானது குடியரசுக் கணக்கில் அரசாங்கத்திற்குள்ள உரிமையாண்மையைப் பிரதிபலிப்பதாகக் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் இரண்டு வருடங்களுக்குக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழிலாளர் காங்கிரஸ் கட்டிடத்திற்காக மீளாய்வுக்குரிய ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 2,130,000 முற்பணத் தொகையானது, 9188 - வாடகை மற்றும் பணி முற்பணக் கணக்கிலும் 9189 - வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்குக் கணக்கிலும் 2026ஆம் ஆண்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கணக்குகளைத் தயாரிக்கும் போது செலுத்தப்பட்ட முற்பணங்கள் சரியான கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும் |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,
(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2025 திசெம்பர் 31ஆம் திகதியாகும்போது நிலுவையிலுள்ள உரிமக் கட்டணங்கள் உள்ளடங்கலாக நிலுவை வருமானம் ரூபா 650,522,043 ஆகக் காணப்பட்டது. அத்தொகையினுள் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து கிடைக்கப்பெற வேண்டியிருந்த ரூபா 17,432,823 உள்ளடங்கியிருந்ததுடன், அதனுள் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 4,400,000 தார் பதிவுக்கட்டணமும் | தற்போது அத்தொடர்புடைய நிலுவைப் பதிவுக்கட்டணங்கள் மற்றும் நிலுவை மாறுபடும் கட்டணங்கள் சம்பந்தமாக அந்த நிறுவனங்களுக்கு தெரிவித்து பணத்தைச் செலுத்துமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 2026 ஜீன் 30ஆம் திகதியாகும் போது உராய்வு நீக்கி எண்ணெய் தொடர்பான அனைத்து | நிலுவை வருமானங்களை இனம் காண்பதுடன், அவை கிடைக்கப் பெறாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்கியிருந்தது. அத்தார் பதிவுக்கட்டணத்தைப் பெற்றுக்கொள்வது நிச்சயமற்றதொரு நிலையில் காணப்பட்டது. மேலும், மேற்கூறப்பட்ட நிதிகளை அறவிடுவது சம்பந்தமாக அமைச்சினால் அறிவித்தல் கடிதங்கள் மாத்திரமே அனுப்பப்பட்டிருந்தன என்பதுடன், ஏனைய எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களினூடாகவும் உரிய கணிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், கணிப்பீடுகளை உறுதிப்படுத்துவதற்காகப் பொருத்தமான குழுவொன்றை நியமித்து அதன் துல்லியத்தன்மையைப் பரிசோதிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று, ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனமொன்று இல்லாத பின்னணியில் இவ்வறிக்கைகளைப் பரிசோதிப்பதற்காக உராய்வு நீக்கி எண்ணெய் தொழில்துறையிலான நிபுணர் ஒருவரின் அல்லது ஆலோசகர் ஒருவரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது கடினமாக உள்ளது. | |

**3.2 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கெரவலபிட்டிய துறைமுக இரண்டாவது நிலத்தடி மின்பரிமாற்ற கேபிள் திட்டத்திற்காக வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடாக ரூபா மில்லியன் 7,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், துணை மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் மற்றும் நி.பி. 66/69 மாற்றங்கள் மூலம் முறையே ரூபா மில்லியன் 5,800 உம் ரூபா மில்லியன் 716.96 உம் குறைக்கப்பட்டமையின் காரணமாக மொத்த நிகர ஒதுக்கீடு ரூபா மில்லியன் 483.03 ஆகக் காணப்பட்டது. அத்துடன், இத்திட்டத்திற்குரிய கடன் ஒப்பந்தம் 2025 திசெம்பர் 15ஆம் திகதி நடைமுறைக்கு வந்திருந்த போதிலும், திட்டம் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்படுத்தப்படாமை காரணமாக மீளாய்வுக்குரிய ஆண்டின் இறுதியில் இச்செலவினம் முழுமையாக எஞ்சியிருந்தது. | இத்திட்டத்திற்கான கடன் பேச்சுவார்த்தைகள் 2024 நொவம்பர் 08ஆம் திகதி நடத்தப்பட்டன. அதற்கமைய, திட்டத்தின் முதலாம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகள் முன்கணிக்கப்பட்டு, 2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டன. 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரச கடன் முகாமைத்துவச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் காரணமாக, இத்திட்டத்திற்கான நிதி மறுமதிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டதுடன், கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான அமைச்சரவை அனுமதி 2025 ஆகஸ்ட் 04 அன்று கிடைத்தது. எவ்வாறாயினும், இதுவரை ஏற்பட்ட தாமதம் காரணமாக, 2025ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடானது முற்கொடுப்பனவிற்கான 10 சதவீதத்தைக் கொண்ட குறைந்தபட்சத் தொகையாகக் குறைக்கப்பட்டது. அமைச்சரவை அனுமதியின் பின்னர், ஒப்பந்தம் | முன் ஆயத்தத் திட்டங்களைத் (Pre Readiness Plan) தயாரித்து திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும், பௌதீகக் கட்டுமானப் பணிகளைச் முன்னெடுப்பதற்குரிய முறையான கண்காணிப்பைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குவதற்கான நோக்கக் கடிதம் 2025 ஆகஸ்ட் 18 அன்று வழங்கப்பட்டு, ஒப்பந்தம் 2025 நொவம்பர் 25 அன்று கையெழுத்திடப்பட்டது. எவ்வாறாயினும், கடன் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தமை 2026 சனவரி 26ஆம் திகதியை அண்மித்த ஒரு திகதியிலேயே நிகழ்ந்தமையின் காரணமாக, 2025ஆம் ஆண்டிற்குள் எவ்வித நிதியையும் விடுவித்துக்கொள்ள முடியாமல் போனது. இத்தாமதமானது அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களினால் ஏற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றேன். | |
| (ஆ) | New Habarana Kappalthurai Transmission Development Project CEATP 1 (AIIB) திட்டத்தின் இனம் காணப்பட்ட பணிகளுக்காக வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடாக ரூபா 1,000,000 உம், சம்பூர் கப்பல்துறை மின்பரிமாற்ற அபிவிருததித் திட்டத்திற்காக வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடாக ரூபா 1,000,000 உம் ஒதுக்கப்பட்டிருந்தன. இத்திட்டத்திற்கான முன் திட்டமிடல்கள் அல்லது பெறுகைக்கான கொள்கை ரீதியான அனுமதி இல்லாதிருந்த பின்னணியில் திட்டக் பெறுகை செயல்முறை 2025 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், வெளிநாட்டுக்கடன் வழங்கும் நிறுவனத்தினால் (AIIB) சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடொன்றை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டதன் காரணமாக, டெண்டர் வழங்குவதற்கு முடியாமல் போயிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகை தாமதங்கள் என்பன, PDMO அனுமதி, கடன் இடர் மதிப்பீடுகள் மற்றும் On-lending / Subsidiary financing செயல்முறை, அமைச்சரவை அனுமதி செயல்முறை, AIIB நிதி மற்றும் பெறுகை தேவைப்பாடு, Loan Agreement negotiation / Loan effectiveness செயல்முறை, AIIB இன் சுற்றுச்சூழல் மற்றும் சமூக அனுமதி, ESIA / ESMP தேவைகள் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்புத் தேவைகள் என்பன காரணமாக ஏற்பட்ட நடைமுறை ரீதியான மற்றும் இணக்கப்பாட்டுடன் தொடர்புடைய தாமதங்கள் எனக் கருதலாம். எனவே, இத்தாமதங்கள் திட்டச் செயற்பாட்டு நிறுவனத்தினால் செயலற்ற தன்மையால் ஏற்பட்ட தாமதங்கள் அல்ல என்பதுடன், தொடர்புடைய அரசாங்க மற்றும் AIIB நடைமுறைகளுக்கு இணங்க திட்டங்களை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு அவசியமான அனுமதி மற்றும் விடுவிப்புச் செயல்முறைகளைப் பூர்த்தி செய்தமையினால் ஏற்பட்ட தாமதங்கள் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். | முன் ஆயத்தத் திட்டமொன்றைத் (Pre Readiness Plan) தயாரித்து திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அவசியமான பணிகளைக் உரிய காலத்தில் மேற்கொள்வதற்கும், திட்டங்களின் பௌதீகக் கட்டுமானங்கள் தொடர்பான கொடுப்பனவுகள் மற்றும் திட்டச் செயற்பாடுகளுக்குரிய முறையான கண்காணிப்பைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வலுசக்தி துறையின் பிரதானத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மின்சாரத் துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. பணியாளர் பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்படாமை காரணமாக 2025ஆம் ஆண்டில் பயிற்சிகள் எதுவும் நடத்தப்படாதமையினால், நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 600,000 ஒதுக்கீட்டுத் தொகை முழுமையாக எஞ்சியிருந்தது. | மின்சாரத் துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிகள் அச்செயலகத்தில் அக்காலப்பகுதியில், அதாவது 2024 அக்டோபர் 16ஆம் திகதி முதல் 2025 அக்டோபர் 16ஆம் திகதி வரையிலும், 2025 அக்டோபர் 27ஆம் திகதி முதல் 2026 சனவரி 15ஆம் திகதி வரையிலும் கடமையாற்றிய பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சின் செயலகப் பணியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய, மின்சாரத் துறை மறுசீரமைப்புச் செயலகத்திற்காகப் புறம்பாக வெளியகப் பணியாளர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. இதன் காரணமாகவே, இத்திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியிலிருந்து எவ்வித செலவினமும் ஏற்படவில்லை. | பயிற்சித் திட்டங்களைத் தயாரித்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27ஆம் திகதியிட்ட 255/2017 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு இணங்க, பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளாக இனம் காணப்பட வேண்டிய 05 செலவின வகைகளுக்குரிய ரூபா.225,438 கொண்ட பொறுப்புகள் மீளாய்வுக்குரிய ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாமதக் குறைபாடுகள் காரணமாக பதிவு செய்ய முடியாமல் போயுள்ளது. | பொறுப்புகளைச் சரியாக இனம் கண்டு நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்ய வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 தொலைநோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சு "தேசியத் தேவைகள் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், குறைந்த செலவிலான வலுசக்தி அணுகலை அதிகரித்தல், எரிபொருள் இறக்குமதியை முகாமை செய்தல், உள்நாட்டில் புதிய ஆற்றல் மூலங்களை வலுசக்தி கலவையில் சேர்த்தல் மற்றும் விதிக்கப்பட்ட | ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட 2026 பெப்ரவரி 25ஆம் திகதியிட்ட 26/0398/825/026 இலக்க அமைச்சரவைப் பத்திரமொன்று தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காகப் பெறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு | தேசியத் தேவையாகக் காணப்படும் வலுசக்தி துறையின் ஒழுங்குபடுத்தல் பணிகளைத் திறம்பட முன்னெடுப்பதற்காக அமைச்சினால் |

| | | |
|---|---|---|
| சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க, வலுசக்தி விடயங்கள் சார்ந்த கொள்கை உருவாக்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் மூலம் சுற்றாடல் நேயமிக்க நிலையான வலுசக்தி வழங்கலை உறுதிசெய்தல்'' என்பதே வலுசக்தி துறையின் செயற்பணியாகும் அதற்கமைய, அமைச்சின் பிரதான பணிகள் மற்றும் கடமைகளின் கீழ் வலுசக்தி வளங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தல் மற்றும் பயன்பாட்டிற்காகப் பொருத்தமான வலுசக்திக் கொள்கையொன்று உருவாக்கப்படவில்லை. மேலும், 2006 ஜீன் 08ஆம் திகதியிட்ட அ.ம.தீ/06/0858/217/015 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, 2002ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு வலுசக்தி ஒழுங்குபடுத்தல் மற்றும் அது தொடர்பான சட்டவாக்கம் சார்ந்த திருத்தங்களை விதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன், 2022ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதிலும் வலுசக்தி ஒழுங்குபடுத்தல் தொடர்பான சட்டவாக்கம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, குறைந்த தரம் மற்றும் இடர்களைக் கொண்ட எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்கள் சந்தைக்கு வருதல், கட்டாய தேசிய எரிபொருள் தரநிலை இல்லாமை, நுகர்வோர் முறைப்பாடுகள் மற்றும் பிணக்குத் தீர்த்தல் பொறிமுறை முறையாகச் செயற்படுத்தப்படாமை, பெறுமதி சேர்க்கப்பட்ட எரிபொருள் தயாரிப்புகள் மற்றும் செயல்திறன் சேர்க்கைகளுக்கான ஒழுங்குபடுத்தல் இல்லாமை, சேவைத் தரம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் குறைபாடுகள் மற்றும் போதுமான பாதுகாப்பு கண்காணிப்பு இல்லாமை காரணமாக நுகர்வோர், சுற்றாடல் மற்றும் தேசிய வலுசக்தி பாதுகாப்பு என்பவற்றுக்கு இடர்கள் ஏற்படுதல், மசகு எண்ணெய் சந்தைத் தரவுகள் மற்றும் தகவல்கள் இற்றைப்படுத்தப்படாமையினால் | இணங்க அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கொள்கைகளும் சட்டங்களும் வகுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உராய்வு நீக்கி எண்ணெய் தொழில்துறை பங்குதாரர்களுக்குச் சுயாதீன சந்தைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போதல் போன்ற இடர்கள் ஏற்பட்டுள்ளன. | | |

**4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை.**

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2007ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டிருந்த தனியார் கம்பனினால் மன்னார் படுகையின் எம் - 2 (M-2) அகழ்வாராய்ச்சி நிலப்பரப்பில் (SL 2007-01-001) மேற்கொள்ளப்பட்ட பெற்றோலிய அகழ்வாராய்ச்சியின் போது 2011ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட இயற்கை எரிவாயு படிவுகளை மேம்படுத்துவதற்கும் உற்பத்திப் பணிகளுக்குமாகப் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை சர்வதேச போட்டித்தன்மையுடனான முன்மொழிவுகளைக் கோரும் செயல்முறையினூடாகத் தெரிவு செய்வதற்காக வெளிநாட்டு ஆலோசனை நிறுவனமொன்று 2016 திசெம்பர் 14 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. ஆலோசனை உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் 2017 திசெம்பர் 13 ஆம் திகதி முடிவடைந்திருந்தது. அப்பணிக்காக அமைச்சினால் ரூபா 46,610,853 (அ.டொ. 300,000) செலவிடப்பட்டிருந்தது. இலங்கையின் பெற்றோலிய வளங்களை அகழ்வாராய்ச்சி செய்தல், மேம்படுத்துதல், உறிஞ்சுதல் மற்றும் முகாமை செய்தல் ஆகிய பணிகளை ஒழுங்குபடுத்தும் நோக்கங்களுடன் 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2021 அக்டோபர் 08 அன்று இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரைக் கண்டறிவதற்கு இவ்வறிக்கையின் திகதி வரையிலும் முடியாமல் போயிருந்தது. | இலங்கையின் மேற்குப் பகுதி கடற்பரப்பிலுள்ள மன்னார் படுகையின் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியை உள்ளடக்கும் வகையில் உரிமம் வழங்கும் சுற்றொன்றை (Licensing Round) ஆரம்பிப்பதற்குப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டிருந்தது. இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட சந்தைப்படுத்தல் ஆலோசகருடன் இணைந்து, பிரத்தியேக இணையதளமொன்றை உருவாக்குவதற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க ஆவணங்களைத் தயாரிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தற்போது நிலுவையிலுள்ள வழக்கு ஒன்றிற்கு அமைவாகக் கௌரவ நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு (Stay Order) காரணமாகவும், அத்தடையுத்தரவு நீக்கப்பட்ட பின்னர் அத்தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளமையினாலும் உரிமங்களை வழங்குதல், சந்தைப்படுத்தல் மற்றும் அது சார்ந்த அனைத்துப் பணிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. எவ்வாறாயினும், உரிமம் வழங்கும் சுற்றை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காக நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) திட்டமிட்டு வருகின்றது. | இயற்கை எரிவாயு படிவுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மின்வழங்கலின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் திட்டத்தின் கீழ், 285 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்ட 33 கிலோவோல்ட் கடத்துகை கோபுரங்கள் 33 கிலோவோல்ட் கேன்ட்ரிகள் 13 இன் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் 2019 அக்டோபர் 28 ஆம் திகதி ரூபா மில்லியன் 7,314.05 செலவில் வழங்கப்பட்டிருந்தது. இத்திட்டமானது இலங்கை மின்சார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 04 பெகேஜ்கள் கீழ் 730 நாட்களுக்குள், அதாவது 2021 அக்டோபர் 27ஆம் திகதியாகும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2026 மார்ச் 31 வரை 06 சந்தர்ப்பங்களில் 1,731 நாட்களினால் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2025 திசெம்பர் 31ஆம் திகதியாகும்போது பௌதீக மற்றும் நிதிசார் நன்மைகள் முறையே 89.02 சதவீதம் மற்றும் 73.76 சதவீதமாகக் காணப்பட்டன. அதற்கமைய, இத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | முகாமைத்துவம் பதில்களை சமர்ப்பிக்கவில்லை. | ஒப்பந்த செயலாக்க திட்டத்தின் (Contract Implementation Plan) பிரகாரம் ஒப்பந்த பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மின்சட்டகத்தை வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஒருங்கிணைப்புத் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட கடன் தொகை 2025 சனவரி 09 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தபோதிலும், இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்த எதிர்பார்க்கப்பட்ட 7 பெகேஜ்களில் எந்தவொரு பெகேஜிக்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்படாததன் காரணமாக, திட்டப் பணிகளுக்காக எவ்வித கொடுப்பனவுகளும் செலுத்தப்படாமல், 2025 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 161,829 இற்குச் சமமான ரூபா 49,045,534 அர்ப்பணிப்புக் கட்டணங்கள் மற்றும் வட்டிக் கட்டணங்களாக மாத்திரம் இக்கடன் தொகையிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | 2025 சனவரி மாதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டதுடன், 2025 மார்ச் மாதம் முதல் பெகேஜ்கள் 1,2,4,5,6 மற்றும் 7 ஆகியவற்றுக்கான டெண்டர் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டில் 6 பெகேஜ்களுக்கான டெண்டர்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், டெண்டர் நடைமுறையின் போது சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் மற்றும் சட்டச் சிக்கல்கள் போன்ற காரணிகளால் | முன் ஆயத்தத் திட்டத்திற்கு (Pre Readiness Plan) அமைய பெறுகை மற்றும் அப்பெறுகை பணிகளை நிறைவு செய்து, எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வருடத்தினுள் டெண்டர்களை வழங்க முடியாமல் போயுள்ளது. எனவே, எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் ஏற்படவில்லை. உத்தியோகத்தர் பற்றாக்குறையும் டெண்டர் நடைமுறையின் தாமதங்களுக்குக் காரணியாக அமைந்துள்ளது. | |
| (இ) | பசுமை வலுசக்தி அபிவிருத்தி மற்றும் வலுசக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தின் (கட்டம் 1) கீழ் செயல்படுத்தப்பட்ட மொரகொல்ல நீர்மின் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 19,288 மில்லியனாகும். திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2019 செப்டம்பர் 30 ஆம் திகதி நிறைவடையவிருந்த போதிலும், முறையான திட்டமிடல் மற்றும் முறையான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படாமை காரணமாக, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கோரிக்கைக்கு இணங்க திட்டத்தின் தொகுதி இலக்கம் 01 ஐ மீளவடிவமைப்பு செய்ய நேரிட்டதாலும், பிராந்தியத்திற்குரிய விசேட மீன் இனமொன்று கண்டறியப்பட்டதால் அது தொடர்பான சுற்றாடல் ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டியிருந்ததாலும், திட்டத்தின் ஆரம்பப் பணிகள் திட்டமிடப்பட்ட காலத்தை விட 03 வருட தாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் இறுதியில் மொரகொல்ல நீர்மின் நிலையத் திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 91.6 சதவீதம் மற்றும் 70 சதவீதமாகக் காணப்பட்டதுடன், திட்டக் காலம் 2026 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | 2024 திசெம்பர் மாதத்துடன் முன்னைய கடன் உடன்படிக்கை முடிவடைந்ததுடன், 2025-2026 ஆம் ஆண்டிற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை பெறப்பட்டுள்ளது. 2025 நொவம்பர் 26 ஆம் திகதி தாக்கிய தித்வா சூறாவளி இத்திட்டத்தை பெரிதும் பாதித்துள்ளதுடன், அதன் காரணமாக திட்டத்தை நிறைவு செய்ய வேண்டிய கால எல்லை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. விடயங்களுடன் உடன்படுகின்றோம். | ஒப்பந்த செயலாக்க திட்டத்திற்கு அமைய ஒப்பந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்து மேற்பார்வை செய்து கண்டறியப்பட வேண்டும். திட்டங்களை விரைவாக நிறைவு செய்து, எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.4 பெறுகைகள்**

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கையேட்டின், பெறுகை வழிகாட்டல் 2.2.1 (எ) இன் பிரகாரம், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலமாக, உரிய பெறுகை அலகுகளின் ஒவ்வொரு ஒப்பந்தமும் | அமைச்சின் பெறுகை நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் அரையாண்டு பெறுகை | பெறுகை செயலாற்றுகை அறிக்கையை, தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கு காலாண்டு |

| | | |
|---|---|---|
| திட்டமிடப்பட்டவாறு, அனைத்து பெறுகை அலகுகளினாலும் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட அனைத்து பெறுகைகளினதும் உண்மை அளவு, நிலைமை, செலவு அத்துடன் கால இலக்குகளுடன் தொடர்புடைய அளவுருக்களை ஒவ்வொரு விநியோகத்தர்/ ஒப்பந்தக்காரர்/ சேவை வழங்குநரின் பெயருடன் குறிப்பிட்டும், உரிய பெறுகை அலகுகளின் விரிவான வருடாந்த பெறுகை திட்டங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டதுமான ஒருங்கிணைந்த ‘‘பெறுகை செயலாற்றுகை அறிக்கையை’’ தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கு காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்க வேண்டும் என்றபோதிலும், 2026 மார்ச் 30 ஆம் திகதி வரை வலுசக்தி அமைச்சு மேற்கூறிய வழிகாட்டலின்படி செயற்பட்டிருக்கவில்லை. | இணக்கப்பாட்டு அறிக்கைகள் இதுவரை வழங்கப்படவில்லை என்பதுடன், எதிர்காலத்தில் அந்த இணக்கப்பாட்டு அறிக்கைகளைத் தயாரித்து தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியத்தருகின்றேன். | அடிப்படையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சினால் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு 09 வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி 104(4) இன் பிரகாரம் ரூபா 1,999,373 பெறுமதியான இழப்பீடுகள் அறைவிடப்பட்டிருக்கவில்லை. | வாகன இலக்கம் PC – 4318 இன் இழப்புத்தொகையான ரூபா 260,828.57 சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளதுடன்,வாகன இலக்கம் HE – 2381 ஆனது இலங்கை மின்சாரச்சபைக்குச் சொந்தமான ஒரு வாகனமாகும் என்பதுடன், அந்நிறுவனத்தினால் இவ்விபத்துடன் தொடர்புடைய இழப்புத்தொகையை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.வாகன இலக்கம் 65 – 2067 ஆனது மின்சாரச்சபைக்குச் சொந்தமான வாகனமொன்று அமைச்சுக்கு சேவைப்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற விபத்து என்பதால், இவ்விபத்து தொடர்பில் எந்தவொரு ஆவணமும் இலங்கை மின்சாரச்சபையிடம் இல்லை என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. இழப்பை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் வழக்குத் தொடர முடியும் என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறியத்தரப்பட்டுள்ளது. வாகன இலக்கங்கள் KF – 1999 மற்றும், PF – 5094 ஆகிய வாகனங்களுக்காக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

கோரப்பட்டுள்ளன.வாகன இலக்கம் PH – 1148 க்காக அறவிடப்பட வேண்டியுள்ள தொகை மற்றும் வாகன இலக்கம், PH – 1150 இன் சேதங்களை பழுதுபார்ப்பதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 117,000 தொகைக்கான பற்றுச்சீட்டு ஆகியன சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வாகன இலக்கம் KL – 9507 இன் கீழ் இதற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியுள்ளது.

## 4.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வின் அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதியிடப்பட்ட 2135/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையின் தேசிய வலுசக்தி கொள்கை மற்றும் மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன. | | |
| (i) | தேசிய செயல்பாட்டுக் குழுவொன்றின் மூலம் குறித்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை செய்தல் மற்றும் அக்குழுவானது காலாண்டு அடிப்படையில் ஒன்றுகூடி, நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தை அமைச்சரவைக்கு அறிக்கை செய்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முழு வலுசக்தி துறையையும் ஆராய்ந்து புதிய வலுசக்தி கொள்கையொன்றை தயாரிப்பதற்காக, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க தேசிய மின்சக்தி சட்டத்தின் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகளுக்கு இணங்க மின்சக்தி துறைக்கான ஆரம்பக்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வலுசக்தி துறைக்கான பொருத்தமான பொறிமுறையொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன், அது 2027 சனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தேசிய செயல்பாட்டுக் குழுவானது காலாண்டு அடிப்படையில் ஒன்றுகூடி, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வலுசக்தி கொள்கை பிரகடனத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், செயல்திறன் காலவரையறை ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒருமுறை (அதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களினால்) திருத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், 2019 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை 06 வருடங்கள் கடந்துள்ள போதிலும் குறித்த செயல்திறன் கால எல்லையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அமைச்சினால் அது மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவுமில்லை. | முழு வலுசக்தி துறையையும் ஆராய்ந்து புதிய வலுசக்தி கொள்கையொன்றை தயாரிப்பதற்காக, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க தேசிய மின்சக்தி சட்டத்தின் (2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகளுக்கு இணங்க மின்சக்தி துறைக்கான ஆரம்பக்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வலுசக்தி துறைக்கான பொருத்தமான பொறிமுறையொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன், அது 2027 சனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கணக்காய்வுக்குத் தேவைகளுக்கு இணங்க, செயல்திறன் கால எல்லைக்கான திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | வலுசக்தி கொள்கையின் செயல்திறன் கால எல்லைக்குள் வலுசக்தி பாதுகாப்பை உறுதி செய்தலின் கீழ், 4.1.d பந்தியின் பிரகாரம் வலுசக்தி துறையின் செயல்திறனில் தீர்க்கமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய உள்ளக மற்றும் வெளியக நிச்சயமற்ற தன்மைகள் குறித்த இடர் மதிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அச்சபையினால் இடர் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முழு வலுசக்தி துறையையும் ஆராய்ந்து புதிய வலுசக்தி கொள்கையொன்றை தயாரிப்பதற்காக மின்சக்தி துறைக்கான ஆரம்பக்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வலுசக்தி துறைக்கான பொருத்தமான பொறிமுறையொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன், அது 2027 சனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வலுசக்தி துறையின் செயல்திறனில் தீர்க்கமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய உள்ளக மற்றும் வெளியக நிச்சயமற்ற தன்மைகள் குறித்து இடர் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு, அது தொடர்பான மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கு அப்பாற்பட்ட பதவியொன்றிற்காக ஒழுங்கற்ற முறையில் பதில் கடமை நியமனமொன்று வழங்கப்பட்டு, 07 வருடங்களுக்கான சம்பளமாக ரூபா 2,000,000 செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்கால நடவடிக்கைகளுக்காக, சரியான தகவல்களைச் சேகரிப்பதற்குப் புதிய டிஜிட்டல் பொறிமுறையொன்றை விரைவாக அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | முறையான அனுமதியுடன் பதில் கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு இல்லாத பட்சத்தில் அதற்குரிய பணத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |